விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 161 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை (28.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தமிழர் தாயகத்தில் 70 வருடங்களாக தமிழின அழிப்பு நடைபெறுகின்றது

### விக்கிப்பீடியா இணையம் மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கில் எழுபது வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற போரில் தமிழர்கள் இன அழிப்புக்கு உள்ளானமை தொடர்பான விபரங்களை விக்கிப்பீடியா (Wikipedia) இணையத்தளம் மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் ஆங்கில மொழியில் வெளியிட்டுள்ளது.

விக்கிப்பீடியா இணையத்தளத்தின் குறித்த அறிக் 15

WIKIPEDIA
The Free Encyclopedia

## ஐஸ் போதையை நுகர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட நால்வர் கைது

(கிளிநொச்சி)


ஐஸ் போதைப் பொருளை நுகர்ந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதான நபர்களிடமிருந்து 2 கிராம் 15

## யுத்தம் நிறைவடைந்த போதிலும்
# வடக்குக்கு சமாதானத்தின் பலன் கிடைக்கவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



*(திருகோணமலை)*

***யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆகியும் சமாதானத்தின் பலனை வடக்கு மக்கள் அனுபவிக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.***

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 202ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், திருகோணமலை, கோமரங்கடவல மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் 16

## இந்தியா பயணமாக ரணில் திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரமாக இந்திய பயணமொன்றை மேற்கொள்ள திட்டமிட்டு வருவதாக தெரிவிக் 15

## மிருசுவிலில் இ.போ.சவிலிருந்து தவறிவிழுந்த நபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மிருசுவில் பகுதியில் பேருந்தில் இருந்து விழுந்த நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்தில் நேற்று மதியம் பய 15

## கனடாவுக்கு பயணமாகவிருந்த நிலையில்
## மோ.சைக்கிள் விபத்தில் 22 வயது இளைஞன் பலி

### சாவகச்சேரி – புத்தூர் வீதியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - புத்தூர் வீதியில் இடம்பெற்ற இடம்பெற்ற மோ.சைக்கிள் விபத்தில் 22 வயதான 15

## மகிந்த அமைத்த அரசை கவிழ்க்க பாரிய சதித் திட்டம்

### நாமல் எம்.பி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்க்க நாட்டில் பாரிய சதி இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

## கொழும்பில் கார்த்திகைப் பூ பொறிக்கப்பட்ட காலணி

### தமிழ் மக்கள் விசனம்



(கொழும்பு)

இலங்கையிலுள்ள பிரபல காலணி நிறுவனத்தின் வெள்ளவத்தையிலுள்ள காட்சியறையில் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட காலணிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் 15

## ஆபத்தான அரசின் திட்டம்

### பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பொருளாதார மாற்றுச் சட்டம் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற் 16

## ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு
## தமிழரசுக் கட்சி இதுவரை முடிவெடுக்கவில்லை - சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என தமிழரசுக் கட்சி இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒருநாளுக்கான சுற்றுலாப்பயணிகளின் வருகை சராசரி 5,000லிருந்து 3,782 ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையானது இம்மாத இறுதிக்குள் 1 இலட்சத்தை கடக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இம்மாதத்தின் இறுதிக்குள் சராசரியாக சுற்றுலாப்பயணிகளின் வருகையானது 120,934 தொடக்கம் 131,112 வரை அமையலாம் எனவும் கூறப்படுகிறது.

இதன் படி இம் மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் 79, 431 பேர் சுற்றுலா வீசா மூலம் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

மேலும் கடந்த ஆண்டு மே மாதத்தின் முதல் 3 வாரங்களில் 83,309 பேர் வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தரவுகளின் படி இந்தியாவிலிருந்தே அதிகபட்ச சுற்றுலா பயணிகள்(26சதவீதம்) வருகை தந்துள்ள நிலையில், இரண்டாமிடத்தில் மாலைதீவுகளிலிருந்து 11 சதவீதமானோர் வருகை தந்துள்ளனர்.

மேலும், சர்வதேச தரப்பில் காணப்படும் விசா பிரச்சினையும் இம்மாத வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கலாமெனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# இரு வேறுபட்ட நிலைப்பாட்டில் மாவையும் சிறீதரனும் செயற்படுகின்றனர்

## சுமந்திரன் பகிரங்க குற்றச்சாட்டு

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பான வழக்கில் சிறீதரன் மற்றும் மாவை சேனாதிராஜா இடையே வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ். ஊடகமையத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும் மாவை சேனாதிராஜாவும் குறித்த வழக்கில் வெவ்வேறு சட்டத் தரணிகளுடன் நீதிமன்றில் முன்னிலையாகியதாக எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,கட்சியின் சார்பாக 7 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் நான் உள்ளிட்ட மூவர் ஒரு நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றோம்.

ஆனால் மீதமுள்ள 4 பேரும் இரு தரப்பாக பிரிந்து வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டு செயற்படுகின்றனர்.

இதனை மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுத்துரைத்தேன். கட்சியின் முன்னணி அங்கத்தவர்கள் யாப்பை தெரியாதது போல் நடந்துகொள்வது தொடர்பிலும் விளக்கமளித்தேன் என்றார். (ம-7,10)

# ரூ 5 இலட்சம் பெறுமதியான வலம்புரிச் சங்கை விற்பனை செய்ய முயன்றவர் கைது

5 இலட்சம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கு ஒன்றை பேருவளை பிரதேசத்தில் உள்ள வர்த்தக குழுவொன்றுக்கு விற்பனை செய்ய முயன்ற மீனவர் ஒருவர் கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயது மீனவரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வலம்புரிச் சங்கைக் கொள்வனவு செய்யும் வர்த்தக குழு என்ற போர்வையில் சந்தேகநபரை கட்டுநாயக்க பிரதேசத்திற்கு வரவழைத்து இவ்வாறு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மீன்பிடித் தொழிலில் பெரிதாக வருமானம் எதுவும் இல்லாத காரணத்தினால் தன்னிடமிருந்த வலம்புரிச் சங்கை விற்பனை செய்ய முயன்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மினுவாங்கொடை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10)

# கெட்செட்டில் பாட்டுக் கேட்ட வண்ணம் ரயில்ப் பாதையில் பயணித்த இளைஞன் ரயில் மோதி பலி

(களுத்துறை)

காதில் கெட்செட் அணிந்தவாறு ரயில் பாதையில் பயணித்த 21 வயதுடைய இளைஞன் ஒருவன் ரயில் மோதி உயிரிழந்துள்ளார்.

களுத்துறை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த இளைஞன் கட்டுகுருந்தவில் இருந்து களுத்துறை நோக்கி காதொலிப்பான் (handfree) ஒன்றை காதில் அணிந்து கொண்டு ரயில் பாதையில் பயணித்ததாக விபத்தை நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அளுத்கமவில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தெற்கு களுத்துறை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# துப்பாக்கி முனையில் கொள்ளுப்பிட்டியில் கொள்ளை

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்த நபரொருவர் அங்கு இருந்தவர்களிடம் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, குறித்த வர்த்தக நிலையத்திலிருந்த 40 இலட்சம்பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் அடங்கிய பொதியொன்று கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)


**வேலணை பிரதேச சபை**
**ஸ்ரீ நயினாதீவு நாக பூசணி அம்மன் கோயில்**
**வருடாந்த உயர் திருவிழா - 2024 பகிரங்க அறிவித்தல்**

01. வருடாந்த உயர் திருவிழா 07.06.2024 ஆம் திகதி ஆரம்பமாகி 23.06.2024 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு இக் காலப்பகுதியில் தற்காலிக வியாபார அனுமதியினைப் பெறுவதற்கு வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தில் 31.05.2024 க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
02. 03.06.2024 (திங்கட்கிழமை) காலை 11.00 மணிக்கு சபைக்கு சொந்தமான யாத்திரிகர் மட வளாகத்தில் தற்காலிக வியாபாரம்,துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கான இடங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படும் ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
03. குளிர்பானக்கடைகள், தேநீர் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துபவர்கள் முறையான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தற்காலிக வியாபார அனுமதி வழங்கப்படும்.
04. ஏலத்தில் முதல்நிலை பெறுபவர் அன்றைய தினமே ஏலத்தொகையை முழுமையாகச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
05. உற்சவ காலத்தில் படகு மூலம் கொண்டுவரப்படும் விற்பனைப் பொருட்களுக்கான படகு அனுமதியினை குறிகட்டுவான் இறங்குதுறையில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
06. ஆலயச் சூழலில் வளர்ப்பு நாய்கள்,மாடுகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பொது வழிகளின் அருகில் கட்டி வைக்கப்படுதல் அல்லது அலைந்து திரிய விடுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
07. குறித்த காலப்பகுதியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
08. முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் ஊடாக சபையினால் அனுமதி வழங்கப் பட்டவர்கள் மாத்திரமே முச்சக்கர வண்டி தரிப்பிடத்திலிருந்து சேவையில் ஈடுபட முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

தொடர்புகளுக்கு : 021 221 0180

(C-0470)


# கொழும்பு காலிமுகத்திடலில் பலவந்தமாக கேளிக்கை நிகழ்வு

(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடல் மைதானத்தில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த ஏனைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் பலம் பெற்ற சில குழுவினர் பலவந்தமாக கேளிக்கை விளையாட்டுக்கள் அடங்கிய திருவிழாவை நடாத்தி வருவதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விழாவை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைகள் நிறுவனம் கொழும்பு காலிமுகத்திடல் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்துள்ளது.

காலி முகத்திடல் மைதானத்தை சமய விழாவிற்காக முன்பதிவு செய்வதற்காக 45 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் ஏற்பாட்டாளர்கள் சுமார் இருபது இலட்சம் ரூபாவையே குறித்த நிறுவனத்திற்கு இது வரை செலுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

அரகலய போராட்டத்தின் பின்னர் கொழும்பு காலிமுகத்திடல் மைதானத்தில் மத நிகழ்வுகள் தவிர வேறு எந்த நிகழ்வுக்கும் இடமளிக்க வேண்டாம் என அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# மரக்கறிகளின் விலை கணிசமானளவு அதிகரிப்பு

(கொழும்பு)

நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் கணிசமான அளவு குறைவடைந்திருந்த மரக்கறிகளின் விலை தற்போது வேகமாக அதிகரித்து வருவதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, ஒரு கிலோ கிராம் போஞ்சி 700 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் கறிமிளகாய் 480 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

அத்துடன் மத்திய மலைநாட்டில் பயிரிடப்படும் ஏனைய மரக்கறிகளின் விலை 350 ரூபாவாக அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க தயார்

## மீண்டும் சஜித் உறுதியளித்ததாக சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



**(யாழ்ப்பாணம்)**

**மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்த தான் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனக்கு உறுதியளித்ததாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.**

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே சுமந்திரன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த மேதின நிகழ்வில் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவேன் என பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலே சஜித் பிரேமதாஸவை சந்தித்த போது, கடந்த மேதின நிகழ்வில் தான் வெளியிட்ட அறிக்கையை செவிமடுத்தீர்களா என கேள்வியெழுப்பியிருந்ததாகவும், அதே வேளை மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட 13 ஐ முழுமையாக அமுல்படுத்தவுள்ளதாகவும் மீண்டும் கூறியதாகவும் சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

அதேவேளை கடந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல 13 ஐ தாண்டி செல்வதை பற்றியும் சிந்தித்து நிலைப்பாட்டை தங்களுக்கு அறிவிக்குமாறு சஜித்திடம் கோரியுள்ளதாகவும் சுமந்திரன் எம்.பி தெரிவித்தார். (நி-6)

# மாங்குளம் மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை

## உளநல மேம்பாட்டு நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு



(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண சுகாதாரதுறைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் முல்லைத்தீவு மாங்குளம் ஆதாரமருத்துவ மனையில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் உளநல மேம்பாட்டு நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் 4,500 மில்லியன் ரூபாய் இலகு கடன் வசதியின் கீழ் இந்த மருத்துவ புனர் வாழ்வு சிகிச்சை மற்றும் உளநல மேம்பாட்டு நிலையம் நிர் மாணிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டட தொகுதியை திறந்துவைக்கும் நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், இலங்கைக்கான நெதர்லாந்து உயர்ஸ்தானிகர், வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைகளை சேர்ந்த உயர் அதிகாரிகள், மருத்துவமனை ஊழியர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர். (நி-6)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த வார இறுதியில்

(கொழும்பு)


2023 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த வார இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. கடந்த ஜனவரி மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகிய உயர்தரப் பரீட்சை பெப்ரவரி முதலாம் திகதி வரை நடைபெற்றது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 281, 445 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65, 531 தனியார் விண்ணப்பதாரர்களும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

பெறு பேறுகள் வெளியாகும் திகதி தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களை நம்ப வேண்டாம் என பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி-6)

# 'சர்வஜன பலய' புதிய கூட்டணி ஸ்தாபிப்பு



(கொழும்பு)

சில அரசியல் கட்சிகள் மற்றும் சில சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து "சர்வஜன பலய" என்ற புதிய கூட்டணியொன்றை நேற்று ஆரம்பித்துள்ளன.

"ஒன்றிணைந்து கட்டியெழுப்பும் நாடு - மகிழ்ச்சி நிறைந்த நாடு" என்ற தொனிப் பொருளின் கீழ் இந்த கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

பிவித்துறு ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, மவ்பிம ஜனதா கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மேலும் சில அரசியல் கட்சிகள் இந்த கூட்டணியுடன் இணைந்துள்ளன. இந்த கூட்டணிக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பில் நேற்றுக்காலை இடம் பெற்றது. (நி-6)

# பொதுத்தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை

## அம்பலப்படுத்திய தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையின் பொதுத் தேர்தலை இந்த ஆண்டில் நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆனாலும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதானி ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமாயின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த ஆண்டில் தேர்தலுக்காக பத்து பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நிதியானது முழுக்க முழுக்க ஜனாதிபதி தேர்தலை நடத்தும் நோக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடத்துவதற்காக நிதியை ஒதுக்கீடு செய்ய முடியாது.

இதேவேளை ஜனாதிபதியினால் மட்டுமே இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்

# சாதிப்பாரா நடால்?

பிரெஞ்ச் ஓபனில் டென்னிசில் ஸ்பெயினின் நடால் கிண்ணம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

ஆண்கள் ஒற்றையரில் ஸ்பெயினின் நடால் (வயது-37), மீது எதிர் பார்ப்பு அதிகரித்துள்ளது.

இத்தொடரில் 14 முறை கிண்ணம் வென்றுள்ள இவர், கடந்த ஆண்டு காயத்தால் பங்கேற்கவில்லை. அடிக்கடி காயத்தால் அவதிப்படும் இவருக்கு, கடைசி பிரெஞ்ச் ஓபனாக அமையலாம்.

எனவே கிண்ணத்துடன் விடைபெற முயற்சிக்கலாம். முதல் சுற்றில் ஜெர்மனியின் ஸ்வெரேவை சந்திக்கும்நடால், தொடரை வெற்றியுடன் ஆரம்பிக்க வேண்டும்.

"நடப்பு சம்பியன்" அந்தஸ்துடன் களமிறங்கும் உலகின் "நம்பர்-1" செர்பியாவின் நோவக் ஜோகோவிச், மீண்டும் அசத்தினால் தனது 25வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லலாம். மற்றொரு ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ், ரஷ்யாவின் டேனியல் மெத்வெடேவ் உள்ளிட்டோரும் கிண்ணம் வெல்ல போராடலாம். இந்தியா சார்பில் சுமித் நாகல் பங்கேற்கிறார்.

**ஸ்வியாடெக் நம்பிக்கை**

பெண்கள் ஒற்றையரில் "நடப்பு சம்பியன்" போலந்தின் இகா ஸ்வியாடெக் மீண்டும் சாதிக்கலாம். உலகின் "நம்பர்-1" வீராங்கனையான இவருக்கு, பெலாரசின் அரினா சபலென்கா போட்டியாக அமையலாம். அமெரிக்காவின் கோகோ காப், மேடிசன் கீஸ், கஜகஸ்தானின் எலினா ரிபாகினா, பிரான்சின் கரோலின் கார்சியா உள்ளிட்டோரும் சம்பியன் ஆக முயற்சிக்கலாம்.

ஆண்கள் இரட்டையரில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, ஆஸ்திரேலியாவின் மாத்யூ எப்டென் ஜோடி களமிறங்குகிறது.



# பி.எஸ்.ஜி அணிக்கு பிரெஞ்ச் கிண்ணம்

## வெற்றியுடன் விடைபெற்றார் எம்பாப்வே




பிரெஞ்ச் கிண்ணத்தை வென்றது பி.எஸ்.ஜி., அணி. விறுவிறுப்பான பைனலில் லியான் அணியை வீழ்த்தியது.

பிரான்சில் கழக அணிகள் மோதும் பிரெஞ்ச் கிண்ண கால்பந்து தொடரின் பைனல் நடந்தது.

இதில் பாரிஸ் செயின்ட் - ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.,), லியான் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் நுனோ மென்டஸ் கொடுத்த பந்தை பெற்ற பி.எஸ்.ஜி., அணியின் டெம்பலே, தலையால் முட்டி முதல் கோல் அடித்தார். 34ஆவது நிமிடத்தில் பேபியன் ரியுஸ் ஒரு கோல் அடிக்க, பி.எஸ்.ஜி., அணி 2-0 என வலுவான முன்னிலை பெற்றது. பின் 55வது நிமிடத்தில் லியான் அணிக்கு ஜேக் ஓபிரையன் ஒரு கோல் அடித்து ஆறுதல் கொடுத்தார். இறுதியில் பி.எஸ்.ஜி., அணி 2-1 என வெற்றி பெற்று, பிரெஞ்ச் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

**ரசிகர்கள் வன்முறை**

பிரான்ஸின் லில்லி நகர நெடுஞ்சாலையில் லியான், பி.எஸ்.ஜி., அணிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட ரசிகர்கள் மோதிக் கொண்டனர். இரண்டு பஸ் உள்ளிட்ட வாகனங்களுக்கு தீ வைத்தனர். 8 பொலிஸார், 30 ரசிகர்கள் காயமடைந்தனர்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் கூறுகையில்,

"விளையாட்டு போட்டியை மகிழ்ச்சியுடன் ரசிக்க வேண்டும். இதில் வன்முறைக்கு இடமில்லை. ரசிகர்களின் வன்முறைக்கு கண்டனம் தெரிவிக்கிறேன்," என்றார்.

**எம்பாப்வே முயற்சி**

பி.எஸ்.ஜி., அணிக்காக தனது கடைசி போட்டியில் பங்கேற்ற பிரான்ஸ் அணித் தலைவர் எம்பாப்வேயின் கோல் அடிக்கும் முயற்சிகள் இரு முறை (20, 41வது நிமிடம்) வீணாகின. இருப்பினும் கிண்ணம் வென்ற மகிழ்ச்சியுடன் விடைபெற்றார்.

சிறந்த முன்கள வீரரான இவர், பி.எஸ்.ஜி., அணிக்காக அதிக கோல் அடித்தவர் பட்டியலில் முதலிடத்தில் (308 போட்டி, 256 கோல்) உள்ளார். 7 சீசனில் விளையாடி, 15 கிண்ணங்களை வென்று கொடுத்துள்ளார். அடுத்து, ரியல் மட்ரிட் கழக அணிக்கு மாற திட்டமிட்டுள்ளார்.

# நியூயோர்க்கில் இந்.வீரர்கள்

## 'ரி20' உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க



"ரி20" உலககிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக அணித் தலைவர் ரோகித், பயிற்சியாளர் டிராவிட் உள்ளிட்டோர் அடங்கிய இந்திய அணியினர் நியூயோர்க் சென்றனர்.

அமெரிக்கா, வெஸ்ட் இண்டீசில் ஐ.சி.சி., "ரி20" உலகக்கிண்ணத் தொடரின் 9வது சீசன் ஜூன் 2இல் ஆரம்பமாகிறது.

மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. இந்திய அணி, தனது முதல் போட்டியில் அயர்லாந்தை (ஜூன் 5, இடம்: நியூயோர்க்) சந்திக்கிறது.

இத்தொடருக்கு தயாராகும் விதமாக இந்திய அணி, பங்களாதேஷுடன் ஒரே ஒரு பயிற்சி ஆட்டத்தில் (ஜூன் 1, இடம்: நியூயோர்க்) விளையாடுகிறது.

இந்திய அணியினர் இரு பிரிவுகளாக அமெரிக்கா செல்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக அணித் தலைவர் ரோகித், பயிற்சியாளர் டிராவிட் உள்ளிட்டோர் அடங்கிய இந்திய அணியினர் நியூயோர்க் சென்றனர்.

இதில் பும்ரா, மொஹமட் சிராஜ், சூர்யகுமார் யாதவ், ரிஷாப் பன்ட், ஷிவம் துபே, ரவிந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், அக்சர் படேல், மாற்று வீரர்களான சுப்மன் கில், கலீல் அகமட் இடம்பெற்றிருந்தனர்.

மற்றைய இந்திய வீரர்களான ஹோலி, துணைத் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, ஜெய்ஸ்வால், சஞ்சு சாம்சன், சகால், அவேஷ் கான் (மாற்று வீரர்) உள்ளிட் டோர் விரைவில் நியூயோர்க் செல்ல உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளர் தொடர்பில் யாழில் கருத்துப் பரிமாற்ற நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொது வேட்பாளர் தொடர்பில் யாழில் கருத்துப் பரிமாற்ற நிகழ்வொன்றினை நடத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

யாழில். எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி பொது வேட்பாளர் தொடர்பில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்விற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாது இவர் அவரின் ஆள் இவரின் ஆள் என தாக்கி பேசாது தமது கருத்துக்களை முன்வைத்து ஆரோக்கியமான கருத்து பரிமாற்றம் இடம் பெற்றால் மக்களுக்கும் தெளிவு கிடைக்கும். அதற்கவே அந் நிகழ்வை ஒழுங்க மைத்துள்ளேன் என தெரிவித்தார். (நி-6)

# குடும்பத்தினரை கட்டி வைத்து நகைகள் கொள்ளையடிப்பு

## பாட்டாளிபுரத்தில் சம்பவம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாட்டாளிபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் குடும்பத்தினரை கட்டி வைத்து விட்டு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் நேற்று அதிகாலை களவாடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாட்டாளிபுரம் கிராமத்தில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்த குடும்பத்தினரை கட்டி வைத்து விட்டு பல இலட்சம் ரூபாய் பெறிமதியான நகைகள் பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்

குறித்த சம்பவம் தொடர்பில் தட்டாங்கண்டல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-315)

# வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ள இஞ்சி விலை



(கொழும்பு)


இலங்கையில் இஞ்சியின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


நாரஹேன்பிட்டி பொருளாதார சந்தையில் நேற்றைய தினம் ஒரு கிலோ கிராம் இஞ்சியின் சில்லறை விலை 5000 ரூபாயாக உயர்வடைந்துள்ளது. குறித்த தகவலை தேசிய நுகர்வோர் முன்னணி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் எலுமிச்சையின் விலை 1800 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்த யானைகள்

## பயன்தரும் மரங்கள் சேதம்





(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதிகளுக்குள் நேற்று அதிகாலை புகுந்த காட்டுயானைகள் பயன் தரும் மரங்களை சேதப் படுத்தியதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக யானைகள் பலன் தரக் கூடிய தென்னை.பலா .மரவள்ளி. வாழை போன்ற பயிர்களை சேதமாக்கி வருவதால் தமது வாழ்வாதாரம் பாதிப்படைவதாக தெரிவித்தனர். (நி-6-316)

# இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டும் உலக நாடுகள்

(கொழும்பு)

இலங்கையின் மூலோபாய சொத்துக்கள் மற்றும் வளங்கள் மீது உலகளாவிய கவனம் காலணித்துவ ஆட்சிக்காலத் தில் இருந்தே தொடர்ந்து வருகிறது.

இந்தவகையில் நாட்டின் கிராஃபைட் துறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான போட்டியில் சீனா, இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே இந்த தொழில்துறையில் கனடா, அவுஸ்திரேலியா நிறுவனங்கள் தங்களை ஈடுபடுத்தியுள்ள நிலையிலேயே இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் உயர்தர காரீயம் காணப்படுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

புவியியல் மற்றும் சுராங்க ஆய்வு பணியகத்தின் பணிப் பாளர் நாயகம் பேராசிரியர் ரஞ்சித் பிரேமசிறி இந்தியா, சீனா உட்பட பல வெளிநாடுகள் இந்த துறையில் முதலீடு செய்ய ஆர்வமாகவுள்ளதாக தெரிவித்துள்ளார். (நி-6)

# இராசிபலன்

28.05.2024
வைகாசி 15, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி பிற்பகல் 3.26 மணிவரை
உத்தராடம் முற்பகல் 9.49 மணிவரை

சுபநேரம் -10.22-11.52 மணிவரை
இராகுகாலம்-2.52-4.22 மணிவரை
அக்கினி நாள் முடிவு.

சந்திராஷ்டமம்
ரோகிணி.

வளவன்

**மேஷம்** – செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்,எடுத்த காரியத்தை எளிதில் நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** – ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** – வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** – பெரியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** – மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** – இனத்தார் பகை மறஎடுத்த முயற்சிகள் கைகூடும், நோய்களில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவமான சம்பங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** – பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** – தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** – சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச் சுமை கூடும்.


**கன்னி** – பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**தனுசு** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** – அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாலை முருங்கன் பகுதியில் அகழ்வுப் பணி முன்னெடுப்பு



(மன்னார்)

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருகன் கோவில் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் நேற்றுக் காலை புதையல் தோண்டியதாக அடையாளம் காணப்பட்ட இடத்தில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றது.

எனினும் குறித்த அகழ்வு நடவடிக்கைகளின் போது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

பேசாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருகன் கோவில் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் புதையல் தோண்டியதாக கூறப்படும் நிலையில் கடற்படை அதிகாரி ஒருவர் உள்ளடங்களாக 8 பேர் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து குறித்த 8 பேரையும் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த நபர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

முருகன் கோவில் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் புதையல் தோண்டியதாக கூறப்படும் இடத்தில் அகழ்வு பணியை முன்னெடுக்க பேசாலை பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய நீதிவான் அனுமதி வழங்கினார்.

மன்னார்,பேசாலை பொலிஸார் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். எனினும் குறித்த பகுதியில் பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி அகழ்வு பணிகள் நடைபெற்ற போது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

எனினும் அகழ்வு பணியின் போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க ஊடகவியலாளர்களுக்கு பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய குறித்த 8 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 'யாழ்ப்பாணம்' நூலுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பண்பாட்டுப் பேரவையால் வருடாந்தோறும் வெளியீடு செய்யப்படும் "யாழ்ப்பாணம்" நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுகின்றது.

"ஈழத்தின் வடபுலம்- வரலாற்றின் முன்னும் பின்னும்" என்ற தொனிப் பொருளில் (மொழி,பண்பாடு,கலைகள் முதலான பல்வேறு பரிணாமங்களை உள்ளடக்கியதான ஆக்கங்கள்) அமைந்த ஆக்கங்களை ,8 பக்கங்களுக்கு மேற்படாமல் ஏ 4 தாளில் கணனித் தட்டச்சு செய்த ( Font: Baamini: font size :12 ) வன்மென் பிரதிகளாக எதிர் வரும் 2024.06.20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, bookjaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது மாவட்ட செயலகத்திற்கு நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட செயலகத்தின் http://jaffna.dist.gov.lk எனும் இணையத்தளத்திலும், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ் மாவட்ட பதில் அரச அதிபர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (நி-6 )

# கொடுப்பனவை அதிகரிக்குமாறு முன்பள்ளி ஆசிரியர்கள் மகஜர்



(குருமன்காடு)

வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றினை இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான் ஊடாக நேற்று முன்தினம் மாலை கையளித்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்த நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக வருகை தந்த வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதியை சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்து தமது பிரச்சனை தொடர்பில் கருத்து தெரிவிக்க முயற்சித்தனர்.

இருப்பினும், பாதுகாப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தர்களால் முன்பள்ளி ஆசிரியர்களை உள்ளே சென்று ஜனாதிபதியை சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதனையடுத்து குறித்த ஆசிரியர்கள் தமது மகஜரை கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஊடாக ஜனாதிபதிக்கு கையளித்தனர்.

ஏனைய அரச சேவை போல் முன்பள்ளி ஆசிரியர்களையும் நிரந்தமாக அரசாங்க சேவைக்குள் உள்வாங்க வேண்டும். முன்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் இல்லாத நிலை உள்ளது. அவை மேம்படுத்தப்பட வேண்டும். முன்பள்ளிகளையும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வந்து அரச கட்டமைப்புக்களாக அவை மாற்றப்பட்டு அபிவிருத்தி செய்ய வேண்டும். இவை உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கி மகஜர் ஒன்றினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்க வந்திருந்தோம். ஆனால் அனுமதி கிடைக்கவில்லை.

இராஜாங்க அமைச்சர் ஊடாக கொடுத்துள்ளோம். ஜனாதிபதி இதனை கவனத்தில் எடுத்து நல்லதொரு முடிவை தருவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அந்த முடிவுக்காக நாம் காத்திருக்கின்றோம் எனத் தெரிவித்தனர். (நி-6-250)

# அடகு வைத்துள்ள காணிப்பத்திரங்களின் உரிமையாளர்களையும் உள்வாங்க ஆராய்வு

## வடமாகாண ஆளுநர்



(வவுனியா)

வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள காணிப்பத்திரங்களின் உரிமையாளர்களையும் உரித்து வேலைத் திட்டத்தில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கபடும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம் சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியா,மன்னார் மாவட்ட மக்களுக்கான காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

காணிப் பத்திரங்களை மீண்டும் பிரதேச செயலாளர்களிடம் வழங்கி தங்களுக்கான உறுதிகளை பெற்றுக்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளமை தொடர்பில் அறியக்கிடைத்துள்ளது.

மேலும் காணிப் பத்திரம் கைமாற்றப்பட்டுள்ளமை, சீதனமாக வழங்கியுள்ளமை, வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், பலருக்கு உரித்து திட்டத்தின் கீழ் காணி உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

எனினும் வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள காணி பத்திரங்கள் தொடர்பில் கலந்துரையாடி ஜனாதிபதி தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பார். எனவே ஜனாதிபதியின் கனவு திட்டமான உரித்து வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். (நி-6)

# மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை திருடும் கும்பல் தொடர்பில் அவதானம்

## பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் பகுதிகளை அண்மித்த பகுதிகளில் அண்மைக்காலங்களாக 32 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. அவை தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் போது , திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை உடனேயே உதிரிப் பாகங்களாக பிரித்து விற்பனையில் ஈடுபடுகின்றனர். அதனால் மோட்டார் சைக்கிள்களை மீட்பதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளோம்.

மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்தி விட்டு, அவற்றுக்கு "ஹாண்டில் லொக்" போட்டு செல்லுமாறும் , மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-6-33)

# உண்டியல் உடைத்து திருட்டில் ஈடுபட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆவரங்கால் சிவன் கோவிலில் உண்டியல் உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆலயத்தில் திருடிவிட்டு மற்றொரு ஆலயத்தில் திருட முற்பட்ட போதே குறித்த நபரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரிடம் இருந்து திருடப்பட்ட பணமும் சில பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முடங்கும் கல்விச் செயற்பாடுகள் அதிபர்கள், ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு

(கண்டி)
வேதன அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேசிய ஆசிரியர் சங்கத்தின் அமைப்பாளர் ஏ.எம்.எம்.ரி பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தேசிய ஆசிரியர் சங்கத்தின் அமைப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.(நி-6)

# வவுனியா மாவட்டத்தில் 123 தொழுநோயாளர்கள்

## தொற்று நோயியல் வைத்திய அதிகாரி தகவல்

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்தில் இதுவரை 123 தொழுநோயாளர்களும், இதில் செட்டிகுளம் பிரதேசத்தில் 69 தொழு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் வைத்திய அதிகாரி சுஜானி தெரிவித்துள்ளார்.**



நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, தொழுநோய் தொற்றும் முறை மற்றும் அதன் அறிகுறிகள், அதற்கான மருத்துவ உதவிகள் போன்ற விடயங்களையும் தெரிவித்திருந்தார்.

மேலும், இக்கருத்தரங்கில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சதுரங்கம், கரம் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
கைதடி பிரதேச சன சமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள், கல்விக்கழகங்கள், முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் கைதையூர் பெரு விழா நிகழ்வில் வெவ்வேறு போட்டிகள் அங்கத்துவ சனசமூக நிலையங்களில் இடம்பெற்றது.

அண்மையில் கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட கரம் சுற்றுப்போட்டியில் வளர்மதி சன சமூக நிலையமும் குமரநகர் சனசமூக நிலையமும் இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

இதில் வளர்மதி 2:0 எனும் விகிதத்தில் வெற்றியை பெற்று சம்பியன் தொடரை கைப்பற்றியது.

ஆறாவது போட்டியாக நடத்தப்பட்ட சதுரங்க போட்டியானது அண்மையில் உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான சதுரங்க போட்டியில் குமர நகர் வி.க 2024 ஆம் ஆண்டுக்கான போட்டியில் முதலாம் இடத்தினை பெற்றதுடன் குமரன் வி.க இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

அதேவேளை 1 ஆம் 2 ஆம் இடத்தினை வளர்மதி ச.ச.நிலையமும், 3 ஆம் இடத்தினை கைதடி வடக்கு ச.ச.நிலையமும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான பிரிவில் 1 ஆம் இடத்தினை வளர்மதி ச.ச.நிலையமும், 2 ஆம் இடத்தினை குமரநகர் ச.ச.நிலையமும் 3 ஆம் இடத்தினை உதய சூரியன் ச.ச. நிலையமும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(898)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம் : 5'8" கி.பா: 14 1/2<br>தகைமை/தொழில்: MSC, IT, Consultant software Engineer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14540 | பிறப்பு - 1996 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம் : 5'3" கி.பா: 11 3/4<br>தகைமை/தொழில்: College(IT), Teacher<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14579 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L, சுயதொழில்<br>எதிர்பார்ப்பு: A/L, படித்த பெண், உத்தியோகம்<br>தொ.இ: B/14542 | பிறப்பு- 1998 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>உயரம் : 5' கி.பா: 32<br>தகைமை/தொழில்: HND Diploma in English, Diploma in Information Technology, English-Teagher (PVT)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14582 |
| பிறப்பு:- 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் கி.பா: 30 3/4<br>உயரம் : 5'9"<br>தகைமை/தொழில்: MBA, IBSL சித்தி, Banker<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகத்தர், Accountant, Engineer, IT, வெளிநாடு (லண்டன், கனடா, அவுஸ்திரேலியா)<br>தொ.இ: B/14543 | பிறப்பு 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'4" கி.பா: 15<br>தகைமை/தொழில்: BBM, DO<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், வெளிநாடு- (லண்டன், கனடா)<br>தொ.இ: G/14583 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் உயரம்: 5"4"<br>தகைமை/தொழில்:- சாரதி (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14545 | பிறப்பு - 1995 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 66<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: BBA, Management Trainee<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14586 |

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

## பொது அறிவித்தல்- வலிகாமம் தெற்கு பிரதேச சபை

எமது வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக வளாகத்தின் வட கிழக்கு பக்கமாக அமரர் செனட்டர் பொன் நாகலிங்கம் அவர்கள் பிரதேசசபை வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவையின் அடிப்படையில் அவரது நினைவுச்சிலை ஒன்றை அமைப்பதற்கு நாகலிங்கம் ஞாபகார்த்த நினைவுச்சபை கோரிக்கை ஒன்றினை எமக்கு விடுத்துள்ளது. எனவே இவ்விடயத்திற்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் எதிர்வரும் 10.06.2024 ஆம் திகதிக்குள் எழுத்துமூலம் செயலாளர், வலிகாமம் தெற்கு, பிரதேசசபை சுன்னாகம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாரதா உருத்திரசம்பவன்,
செயலாளர்,
வலிகாம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### பப்புவா நியூகினியா மண்சரிவு

# சுமார் 2000 பேர் வரை புதையுண்டிருக்கலாம் என அச்சம்



(ஜகர்த்தா)
பப்புவா நியூகினி மண் சரிவில் சிக்கி 2000இற்கும் அதிகமானவர்கள் காணாமல்போயிருக்கலாம் என அச்சம் வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற பேரிடர் காரணமாக 2000 இற்கும் அதிகமானவர்கள் மண்ணில் புதையுண்டிருக்கலாம் என பப்புவா நியுகினியின் தேசிய முகாமைத்து நிலையத்தின் இயக்குநர் கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

இடிபாடுகள் காரணமாக மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் உயிரிழப்பு குறித்த துல்லியமான புள்ளிவிபரங்களை பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளது.

சில பகுதிகளில் பத்து அடி ஆழத்தில் இடிபாடுகள் காணப்படுகின்றன. மேலும் இவற்றை அகற்றுவதற்கு போதிய இயந்திரங்கள் அற்ற நிலையும் காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் 670 பேர் காணாமல்போயுள்ளனர் என தெரிவித்துள்ள நிலையில் மிகக்குறைவானவர்களின் உடல்களே மீட்கப்பட்டுள்ளதாக பப்புவா நியுகினி தகவல்கள் தெரிவிக்கின்றன.

எங்கா பிராந்தியத்தில் ஏற்பட்ட மண்சரிவில் பல கிராமங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளன. ஒரு கிலோமீற்றர் தொலைவிற்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மண்சரிவிற்கு முன்னர் அந்தப் பகுதியில் 3800 பேர் வசித்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி-6)

# இணையவழி துஷ்பிரயோகம் 300 மில்லியன் சிறுவர்கள் பாதிப்பு

(ஸ்கொட்லாந்)
உலக அளவில் கடந்த ஒரு வருட காலத்தில் மாத்திரம் 300 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் இணையவழி துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தின் எடின்பெர்க் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்விலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் தங்களை இளைஞர்கள் போல் காட்டிக்கொண்டு சமூக ஊடகங்கள் மூலம் சிறுவர், சிறுமிகளை ஏமாற்றிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

# சூடானில் இராணுவ மோதல் 47 பேர் உயிரிழப்பு

(சூடான்)
வடகிழக்கு ஆபிரிக்க நாடான சூடானின் எல்-ஃபாஷர் நகரில் ஏற்பட்ட இராணுவ மோதலில் 30 பொது மக்கள் மற்றும் 17 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.



சூடான் ஆயுதப் படைக்கும் அதிவிரைவு ஆதரவுப் படைக்கும் இடையே ஏற்பட்ட மோதலின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் அதிகார மோதலில் தொடங்கிய வன்முறையால் சுமார் 90 லட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி இடம்பெயர்ந்துள்ள நிலையில், பட்டினியால் தவித்து வருகின்றனர்.

தலைநகர் கோர்டாமில் 2000 ஆம் ஆண்டுகளில் தொடங்கிய வன்முறையில் மேற்கு சூடான் நகரங்களை அதிவிரைவு ஆதரவுப் படை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த நிலையில், கடைசி நகராக எல்-ஃபாஷரை கைப்பற்ற கடும் துப்பாக்கி சண்டை நடந்து வருகின்றது. (ரி-6)

# ஹமாஸின் ... அதிர்ந்தது

(டெல்அவிவ்)

## இஸ்ரேலின் தலைநகர் ... பாலஸ்தீன ஹமாஸ் அமை... வீசி தாக்குதல் நடத்திய... கியுள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் கடந்த 4 மாதங்களில் முதல் முறையாக இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். ஹமாஸ் அமைப்பினர் ரஃபா பகுதியில் இருந்து தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளனர்.

தெற்கு காசாவில் உள்ள ரஃபா பகுதியில் இருந்து குறைந்தது எட்டு ரொக்கெட்டுகள் ஏவப்பட்டதாகவும் பலவற்றை இடைமறித்...

# சூடு பிடிக்கும் பிரித்தா... கடும் நெருக்கடியில் ...

(லண்டன்)
பிரித்தானியாவில் பொது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் 78 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து பின்வாங்கியுள்ளனர்.



அமைச்சரவை அமைச்சர்களான மைக்கேல் கோவ் மற்றும் ஆண்ட்ரியா லீட்சம் ஆகியோரும் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவை அறிவித்துள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்த அறிவிப்புகளை அவர்கள் தங்களின் சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர். அத்துடன், தேர்தலில் போட்டியிடாமைக்கான காரணங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர், பென் வாலஸ் ஏற்கனவே அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள நிலையில், முன்னாள் பிரதமர் தெரசா மேயும் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகியுள்ளார்.


இவ்வாறான பின்னணியில் தனது நெருங்கிய ஆலோசகர்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ன் ரொக்கெட் தாக்குதலால்
# து இஸ்ரேலின் தலைநகர்

### ர் டெல் அவிவ் நகரின் மீது
### மைப்பு ரொக் கெட்டுகளை
### யெதாக தகவல் வெளியா



ததாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

காசா முழுவதும் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் இந்த வாரம் தீர்ப்பு வழங்கிய போதிலும், இஸ்ரேல் இராணுவம் ரஃபா மீதான தாக்குதலை தீவிரப்படுத்திய நிலையில் ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

---

## தானிய தேர்தல் களம்
## ல் பிரதமர் ரிஷிசுனக்



ளுடன் பிரதமர் ரிஷிசுனக் தேர்தல் வியூகங்கள் பற்றி விவாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பிரித்தானியாவில் அண்மைய காலங்களில் இடம்பெற்ற இடைக்கால மற்றும் உள்ளூராட்சி தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது.

மேலும், பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி முன்னேற்றங்களை கண்டுள்ள நிலையில் பொது தேர்தலிலும் அபார வெற்றியை பதிவு செய்து ஆட்சியை கைப்பற்றும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தொழிற்கட்சித் தலைவர் கெய்ர் ஸ்டார்மர், கன்சர்வேடிவ்கள் பொருளாதாரத்தை சேதப்படுத்தி, வாழ்க்கைச் செலவுகளை உயர்த்தியுள்ளனர் என்ற வாதத்துடன், தனது பிரசார திட்டங்களில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, பொது தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி வாய்ப்பு 22 சதவீதமாகவும், தொழிற்கட்சியின் வெற்றி வாய்ப்பு 44 சத வீதமாகவும் காணப்படுதாக பிரித்தானிய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (நி-6)

---

## இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கூடாரங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்

### சுமார் 35 பேர் உயிரிழப்பு



(காசா)

ரபாவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கூடாரங்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 35 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அனேகமானவர்கள் சிறுவர்கள், பெண்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

டல் அஸ் சுல்தான் பகுதியில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேல் காசா நகரம் உட்பட வேறு பகுதிகளில் கடந்த 24 மணிநேரத்தில் பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் இதில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் காசாவின் .மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய இராணுவம் தாக்குதலை மேற்கொண்டதை உறுதி செய்துள்ளதுடன் ஹமாஸ் உறுப்பினர்களை துல்லியமாக தாக்கும் ஆயுதங்களை பயன்படுத்தி இலக்கு வைத்ததாக தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது





(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க் காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் 63 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு அறநிதியச்சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க் காதேவி தேவஸ்தான அன்ன பூரணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கொழும்பு லங்கா மருத்துவமனை இரு தய சத்திர சிகிச்சை நிபுண ரான ஞானச்சந்திர மூர்த்தி காந்திஜி, திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் ஹரிகரன் தன்வந்த் ஆகியோருக்கு இளைய தலை முறை ஆற்றலாளருக்கான விருது வழங்கி கௌரவிக் கப்பட வுள்ளது. (நி-6-33)

# 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கண்டி)

சீரற்ற வானிலை காரண மாக நாட்டின் 7 மாவட்டங்க ளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமு லில் உள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத் துறை, கண்டி, கேகாலை, நுவ ரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இவ் வாறு மண்சரிவு அபாய எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலை காரணமாக 11 ஆயிரத்து 949 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 627 பேர் பாதிக்கப்பட் டுள்ளதாக அனர்த்தமுகாமை த்துவ மத்திய நிலையம் தெரி வித்துள்ளது. சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 140 | 160 | 160-180 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 150 | 80-100 | 150 |
| தக்காளி | 280 | 200 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 140 | 100-130 | 200 |
| கோவா | 250 | 200 | 280 | 150 | 250 |
| கரட் | 250 | 320 | 300 | 200 | 320 |
| பூசணி | 100 | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 180 | 260 | 300 | 130 | 300 |
| வாழைக்காய் | 100 | 90 | 100 | 70-80 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 250-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 250 | 250 |
| பாகற்காய் | 600 | 650 | 600 | 300 | 700 |
| வெண்டக்காய் | 180 | 200 | 150 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 150 | -- | 200 |
| பயற்றங்காய் | 150 | 180 | 150 | 200-350 | 100 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 420 | 350 | 600 | 300 | 500 |
| கறிமிளகாய் | 200 | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 1000 | 400-700 | 1000 |
| போஞ்சி | 600 | 750 | 600 | 350 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 160 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 120 | 160 | 100 | 50-70 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1300 | 1000 | 900-1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 30-90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 650 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | -- | 200 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | 120 | -- | 100 | 70 | -- |

# இன்று ஒரு தகவல் 137



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நான்

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். ராஜா என்று இருந்தால் அமைச்சர் என்று இல்லாமலா? அவரும் இருந்தார். அந்த அமைச்சர் ஒரு நாள் காட்டுக்குப் போனார். அந்தக் காட்டிலே ஒரு துறவி உட்கார்ந்திருந்தார். அந்தத் துறவியைப் பார்த்தவுடனே இவர் ஓடிப்போய் அவருடைய கால்களில் விழுந்து வணங்கினார். உடனே அந்தத் துறவி அமைச்சருக்கு ஆசீர்வாதம் வழங்கினார். அவரை வாழ்த்தினார். நூறாண்டுகாலம் வாழ்க! என்றார்.

அதைக் கேட்டவுடனே அமைச்சருக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. அவருக்கு மனது நிறைந்து விட்டது. அந்த நிறைவோட அரண்மனைக்குத் திரும்பி வந்தார். நேராக ராஜாவிடம் சென்றார். எங்கே சென்று வருகிறீர்கள் என்று ராஜா கேட்டார். "காட்டுக்கு சென்று வருகின்றேன் அது சம்பந்தமாகத் தான் உங்களிடம் பேசுவதற்கு அவசரமாக ஓடி வந்தேன்" என்றார்.

என்ன விடயம்? என்று கேட்டார். காட்டிலே ஒரு துறவி உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்ததும் காலிலே விழ வேண்டும் என்று தோன்றியது. விழுந்தேன். உடனே அவர் என்னை மனதார வாழ்த்தினார். ஆசீர்வாதம் செய்தார். நூறாண்டுகாலம் வாழ்க என்று வாழ்த்தினார். நீங்களும் அந்தத் துறவியிடம் சென்று ஆசீர்வாதம் வாங்கினால் நல்லது என்றார்.

ராஜா யோசித்துப் பார்த்தார். அவரிடம் சென்று வந்தால் நல்லது என்று முடிவு செய்தார். இப்போதும் நமக்கும் நிலைமை சரியில்லாமல் இருக்கின்றது. பக்கத்து நாட்டு ராஜா எப்போது நம் நாட்டின் மீது படை எடுக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றான். அதனால் சாமியாரிடம் ஆசீர்வாதம் வாங்கினால் அது நமக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று முடிவு செய்தார்.

உடனே புறப்பட்டு காட்டுக்குப் போனார். தனியாகவா போனார்? சகல பரிவாரங்களுடன் போனார். ராஜா என்றால் சும்மாவா? மிகவும் ஆடம்பரமாக, ஏக தடபுடலாக காட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். இவர் போய்ச் சேர்ந்த நேரத்திலே அந்தத் துறவி தியானத்திலே இருந்தார். "சுவாமி தியானத்திலே இருக்கிறார்; கொஞ்சம் காத்திருங்கள்" என்று சொன்னார்கள் அங்கிருந்த சீடர்கள். "நான் யார் தெரியுமா? இந்த நாட்டு மன்னன்! ராஜா வந்திருக்கிறார் என்று உங்கள் குருவிடம் சொல்லுங்கள்" என்று உத்தரவு போட்டார் ராஜா. "முனிவருடைய தியானத்தை கலைக்க முடியாது" என்று சீடர்கள் சொன்னார்கள். வேறு வழியில்லாமல் ராஜா காத்துக் கொண்டிருந்தார். நீண்ட நேரத்திற்குப் பின் முனிவர் கண்ணைத் திறந்து பார்த்தார். "நான் தான் இந்த நாட்டு ராஜா வந்திருக்கிறேன் என்னுடைய அமைச்சர் இங்கே வந்திருந்ததாகவும், நீங்கள் அவரை வாழ்த்தியதாகவும் கேள்விப்பட்டேன். அது தான் வந்தேன். என்னையும் நீங்கள் வாழ்த்த வேண்டும். ஆசீர்வாதம் செய்ய வேண்டும்" என்றார். முனிவர் நிமிர்ந்து பார்த்தார்.

"அமைச்சரை வாழ்த்தியதை விட என்னை கொஞ்சம் அதிகமாக வாழ்த்த வேண்டும் ஏன் என்றால் நான் ராஜா இல்லையா?" என்றும் கேட்டார் ராஜா. அமைச்சரை நூறாண்டுகாலம் வாழ்க! என்றார் அதற்காக ராஜாவை நூற்றுப்பத்தாண்டு வாழ்க! என்றா சொல்ல முடியும்? முனிவர் அதைப் பற்றி எல்லாம் யோசிக்கவில்லை. நிமிர்ந்து அந்த ராஜாவைப் பார்த்து "நான் இறந்த பிறகு வா அதற்கு பின் உன்னை வாழ்த்துகிறேன்" என்று கூறினார். ராஜாவிற்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாகப் போய்விட்டது. திரும்பி வந்து விட்டார்.

அமைச்சரை அழைத்து விடயத்தைக் கூறினார். "முனிவர் இதுபோல் கூறிவிட்டார் எனக்கு ஒன்றும் புரியவில்லை அது தான் திரும்பி வந்துவிட்டேன்" என்றார் ராஜா. முனிவர் அப்படி சென்னதற்கு என்ன அர்த்தம் என்று அமைச்சருக்கு புரிந்து விட்டது. ராஜாவிற்கு அதை விபரமாக எடுத்துச் சொன்னார்.

"மன்னா! முனிவர் நான் என்று கூறியது தன்னைப் பற்றி இல்லை உங்களிடம் இருக்கின்ற நான் என்கின்ற அகங்காரத்தைத் தான். அவர் அப்படி கூறியிருக்கிறார். அந்த நான் என்கின்ற செருக்கு உங்களிடமிருந்து ஒழிந்ததற்கு பின் அவர் தன்னிடம் வரும்படி கூறியிருக்கிறார்" என்று அமைச்சர் விளக்கினார். ராஜாவிற்கு அதற்குப் பின் தான் விடயம் புரிந்தது. தன்னிடம் இருந்த அகங்காரத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க ஆரம்பித்தார். அது முழுவதும் ஒழிந்த பின் மறுபடியும் அந்தத் துறவியிடம் போனார். மனப்பூர்வமாக ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இந்த "நான்" நம்மளிடம் இருந்து போனால் தான் பெரியவர்கள் ஆசீர்வாதமே நமக்கு கிடைக்கும்.

இந்தக் கதையை அரை குறையாக புரிந்து கொண்டவர் ஒருவர் இருந்தார். அவர் ஒருவருக்கு கடன் கொடுத்தார். அதை திரும்பப் பெறுவதற்குப் போனார். அவர் இவரைப் பார்த்து விட்டு நான் இறந்த பின்பு வா என்று கூறினார். அந்த முனிவர் கூறியது மாதிரி. இவரும் திரும்பி வந்து தன்னுடைய அகங்காரத்தை எல்லாம் விட்டுவிட்டு மறுபடியும் அவரிடம் போனார்.

அங்கே சென்று பார்த்தால் அவர் உண்மையாகவே இறந்து போய்விட்டார். இறப்பதற்கு முன் தன் பிள்ளையிடம் ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்துள அவர் தேடி வந்தால் அதை அவரிடம் கொடு என்று கூறியிருந்தார். அவரும் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். நான் என்கிற அகங்காரம் இப்போது உன்னிடம் இருக்காது என்று நினைக்கின்றேன். அது இல்லை என்றால் அதற்குப்பின் "என்னுடையது" என்ற எண்ணமும் இருப்பது நியாயமில்லை. இந்த அளவிற்கு மாறிய பின் அந்தப் பணம் என்னுடையதாக இருந்தால் என்ன உன்னுடையதாக இருந்தால் என்ன எல்லாம் ஒன்று தான் சென்று வா! என்று எழுதியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை தியோநகர் மீனவர்கள் போராட்டம்



(நெளுக்குளம்)
சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்க கோரியும் வீதி மறிக்கப்பட்டதை கண்டித்தும் தியோநகர் மீனவர்கள் நேற்று முன்தினம் இரவிலிருந்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கரையோர கிராமங்களில் ஒன்றான தியோநகர் பகுதியில் பிராதான வீதியினையும், கடற்கரையினையும் இணைக்கும் இணைப்பு வீதியானது சில தரப்பினரால் மறித்து வேலி இடப்பட்டுள்ளது.

குறித்த வீதியூடாக மீன்பிடிக்கு செல்ல முற்பட்ட மீனவர்கள் வீதியானது வேலி அடைக்கப்பட்டு கற்கள் போடப்பட்டு மூடப்பட்டிருப்பதை அவதானித்ததை அடுத்து தியோ நகர் மக்கள் ஒன்று கூடி குறித்த வீதித்தடைகள், வேலிகளை அகற்றியுள்ளனர்.

அதேவேளை தமது மீன்பிடிப்படகுகள், வலைகளை உள்ளே வைத்தே வேலைக்கு செல்லும் பாதையினை அடைத்ததாகவும் கரையோரத்தில் மீன்பிடிப்பதற்கு சுதந்திரமாக விடுவதில்லை என்றும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர் .

குறித்த பகுதியில் சுற்றுலாத்தளம் ஒன்றினை அமைத்துள்ள தனியார் நிறுவனம் ஒன்று தொடர்ச்சியாக மீனவர்களுக்கு தொல்லை கொடுத்து வருவதாகவும், தமது வளங்களை சுரண்டி வருவதாகவும் அப்பகுதி மக்கள் கூறியிருந்தனர்.


தமக்கான நிரந்தர த்தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் குறித்த இடத்தில் ஈடுபடப் போவதாக மக்கள் தெரிவித்தனர். (நி-6-299)

# மாங்குளம் மருத்துவமனைக்கு 81 பேரை நியமிக்க அனுமதி

(முல்லைத்தீவு)
மாங்குளம் மருத்துவமனையில் திறக்கப்பட்ட பிரிவிற்கு ஆளணி தேவைப்பட்ட நிலையில் 81 பேரை நியமிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது என வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாங்குளம் ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் உளநல மேம்பாட்டு நிலையத்தை ஜனாதிபதி நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இதன் போது மருத்துவமனையில் திறக்கப்பட்ட பிரிவிற்கு ஆளணி தேவைப்பட்ட நிலையில் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து 81பேரை நியமிப்பதற்கான அனுமதி கிடைத்தது என ஆளுநர் தெரிவித்தார். (நி-6)



**இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் "பெண்கள் அதிகாரமளிக்கும் யோகா" எனும் கருப்பொருள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை SOS சிறுவர் கிராமத்தில் இடம்பெற்றது.**

**இதன் போது குறித்த கிராமத்தைச் சேர்ந்த சுமார் 70 குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3128

### கமல்

மச்சான் உனக்கு செஸ் விளையாட தெரியுமா?




விளையாட தெரியுமாவா? நீ கிரவுண்டுல போய் வெயிட் பண்ணு, நான் ஷேவ் பண்ணிட்டு வரேன்



இவனையெல்லாம் வச்சிகிட்டு என்னா பண்றது

### சிந்துஷன்

ஆண்களுக்கு முப்பது வயது வரைக்கும் தான் 'Hair style' எல்லாம்



அதுக்கு மேல Hair இருந்தாலே style தான்... விட

### கீர்த்தனன்

பக்கெட்டுல சிக்கன் பிரியாணி வாங்கி சாப்பிட்டது

வேலைய காட்டுது சகலை என்ன ஆச்சு...?



நிக்காம போறப்பதான் பக்கெட் ஏன் குடுத்தான்னு இப்ப தெரியுது

### சானுஜா

மண்ணையும் மனுசனையும் குளிர வைச்சப்பா நீ நல்லா இருக்கனும்...




எல்லோருமே என்னை மாதிரி இருக்கமாட்டாங்க ... டிசம்பர் வர்ற என்னோட சொந்தக்காரங்க கிட்ட மட்டும் ஜாக்கிரதையா இரு

### பானு

நன்றியை மிஞ்ச நாயையும்... துரோகத்தில் மிஞ்ச மனிதனையும்...



இவ்வுலகில் வேறு உயிரினம் இல்லை...

### கர்ஷனா




airoplan sound கேட்டா மேல பாத்தா தான் மனசு லேசா இருக்கு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 492



அந்த ஊமை ஸ்திரீயைப் பிடித்துக் கொண்டு போவது அவ்வளவு சுலபமாயிருக்கும். அவள் யாரோ தெரியவில்லை. நம் இளவரசரிடம் மிக்க அபிமானம் வைத்திருக்கிறாள். உனக்கு ஏதாவது அவளைப்பற்றித் தெரியுமா?"

"அவள் ஊமை என்பதும், பிறவிச் செவிடு என்பதும் தெரியும். அவளை அழைத்துச் செல்வதைக் காட்டிலும் புயற்காற்றைக் கூண்டில் அடைத்துக்கொண்டு போவது சுலபம் என்றும் தெரியும். ஆயினும் என் எஜமானர் சொல்லியிருக்கிற படியால் ஒரு பிரயத்தனம் செய்து பார்ப்பேன்."

"இந்த ஓடக்காரப் பெண்ணுக்கும் அவளுக்கும் கூடச் சிநேகம் போலிருக்கிறது. இரண்டு பேரும் ஜாடைகளினால் பேசிக்கொள்வதைப் பார்! அந்தப் பெண்ணை இங்கே கூப்பிடு! அவளுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய வேண்டும்!"

ஆழ்வார்க்கடியான் அந்தப் பெண்களின் அருகில் சென்று பூங்குழலியிடம் சேனாதிபதி அழைப்பதைக் கூறினான்.

பூங்குழலி ஊமை ராணியை விட்டுப் பிரிந்து சேனாதிபதியை அணுகினாள்.

"இதோ பார், பெண்ணே! நீ வெகு புத்திசாலி! நல்ல சமயத்தில் வந்து, முக்கியமான செய்தி சொன்னாய். சோழகுலத்துக்குப் பெரிய உதவி செய்தாய். இதை நான் என்றும் மறக்க மாட்டேன். தக்க சமயத்தில் தகுந்த பரிசில் கொடுப்பேன்" என்றார்.

பூங்குழலி, "வந்தனம், ஐயா! எனக்குப் பரிசில் எதுவும் தேவையில்லை" என்று பணிவுடன் சொன்னாள்.

"தேவையில்லை என்றால் யார் விடுகிறார்கள்? இந்தக் குழப்பமெல்லாம் கொஞ்சம் அடங்கட்டும். பிறகு பிறகு சோழ நாட்டுச் சைன்யத்தில் வீராதி வீரனாகப் பார்த்து உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். உனக்கு வாய்க்கின்ற கணவன் அற்ப சொற்பமானவனாய் இருந்தால் போதாது. பீமசேனனாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனைக் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டி வைத்துவிட மாட்டாயா?" என்று சேனாதிபதி கூறிப் புன்னகை புரிந்தார்.

பூங்குழலி தரையைப் பார்த்தபடி நின்றாள். அவள் உள்ளத்தில் கோபம் பொங்கியது. ஆனால் அதை அச்சமயம் காட்டிகொள்ள விரும்பவில்லை. இந்த முரட்டுக் கிழவரிடம் சண்டை பிடிப்பதில் பயன் என்ன? கோபத்தை அடக்கிக் கொள்ள முயன்றாள்.

"ஆனால் ஒரு விடயத்தை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள், இளவரசருக்கு ஏதோ உதவி செய்துவிட்டபடியால், அவர் பேரில் அதை கொண்டாடலாம் என்று எண்ணாதே! கடலில் வலை போட்டு மீன் பிடிப்பதோடு நிறுத்திக்கொள்! இளவரசரை வலை போட்டுப் பிடிக்கலாம் என்று ஆசைப்படாதே! ஜாக்கிரதை, பெண்ணே! இனி அவர் அருகில் நெருங்கினாலும் உனக்கு ஆபத்து வரும்!" என்றார் சேனாதிபதி. அவருடைய குரல் அப்போது மிகக் கடுமையாக இருந்தது. அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் காய்ச்சிய ஈயத்துளியை விடுவது போல் பூங்குழலியின் காதில் விழுந்தது.

அந்தக் கிழவனாருக்குப் பதிலுக்குப் பதில் காரசாரமான வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் என்று பூங்குழலி விரும்பினாள். ஆனால் பேச இயலவில்லை தொண்டை அடைத்தது. காதில் விழுந்த காய்ச்சிய ஈயத் துளிகள் கண் வழியாக வெளி வந்தன போல் வெப்பமான கண்ணீர்த் துளிகள் தோன்றிக் கண்களை எரியச்செய்தன.

குனிந்த தலை நிமிராமல் பூங்குழலி திரும்பினாள். கடற்கரைக்கு எதிர்ப்பக்கம் நோக்கி நடந்தாள். நடை மெதுவாக ஆரம்பமாயிற்று. வரவரவேகம் அதிகரித்தது.

ஊமை ராணி இருந்த திசையை ஒரு கணம் கடைக்கண்ணால் பார்த்தாள். அவள் அருகில் ஆழ்வார்க்கடியான் நின்று ஏதோ அவளிடம் தெரிவிக்க முயன்று கொண்டிருப்பதைக் கண்டாள். மனிதர்கள் உள்ள இடத்திலேயே தான் இருக்கக்கூடாது என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காக்கா ஏன் கறுப்பாச்சு?

(நேற்றைய தொடர்ச்சி)

சரி என்று அந்த பையை ஒரு மரத்தில் மாட்டிவிட்டு திருமண ஊர்வலத்துக்கு போனதாம்.

மரத்தின் கீழ் இருந்த ஒருத்தன் இந்த காக்கா பையை வைத்து விட்டு போனதை பார்த்து கொண்டே இருந்தானாம். நல்ல வாசனை வந் தது.

அதனால் மரத் தில் ஏறி பையை திற ந்து பார்த்து இருக் கான். பைக்குள்ள சூரி யன் கொடுத்து அனு ப்பின எல்லா பொரு ளையும் பார்த்து சொக்கி போய்விட்டானாம். உடனே எல்லாத்தையும் எடுத்து கொண்டு மரத்தில் இருந்த குப்பை எல்லாவற்றையும் பையில் எடுத்து போட்டுவிட்டு கிளம்பிட்டான்.



காக்கா நல்லா சாப்பிட்டு வந்ததாம். பையை எடுத்து கொண்டு இளவரசி அரண்மனைக்கு போய் விட்டதாம். அங்க இளவரசியிடம் சூரியன் கொடுத்த பையை கொடுத்ததாம். திறந்து பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி.

ச்சே..இந்த சூரியன் ஏன் இப்படி செய்ததது. என் மேல் அன்பே இல்லை. எல்லாம் நடிப்பு. அவன் பேச்சு இனிமேல் தேவையில்லை என்று சொல்லிட்டு பையை விசிரி எறிந்து விட்டதாம்.

மறுநாள் காலை, சந்தோஷமா இளவரசிய பார்க்கலாம் என்று வந்த சூரியனுக்கு தூக்கி வாரி போட்டுச்சாம். அந்த பை கீழே விழுந் திருந்ததை பார்த்தே ஏதோ தப்பு நடந்திருக்கு என்று புரிந்து கொண்டதாம். பயங்கர கோபம் வந்து விட்டதாம்.

காக்காவை பார்த்து கோவமா பாத்த உடனே வெள்ளையா இருந்த காக்கா கறுப்பா மாறிடுச்சாம். அதனால் தான் சூரியனிடம் கூட பறக்க முடியாம போய் விட்டதாம். அதனால் தான் கிட்ட இருந்த சூரியனும் பூமி மேல கோபம் வந்து தூரமா போயிடுச்சாம். இப்ப தெரிஞ்சுதா காக்கா ஏன் காக்கா கறுப்பாச்சு என்று. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி மூலம் செய்யப்படும் சிறு முயற்சிகள் நம் இதயத்தில் மிக அற்புதமான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். – பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சித்தார்த்தன் எம்.பிக்கு ஓர் அவசரக் கடிதம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

இந்த மடல் தங்களுக்கு அவசரமாக எழுதப்படுகிறது.

தங்கள் தந்தையார் 15 வருடங்களுக்கு மேல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவரின் ஈகை இன்னமும் தமிழ் மக்களால் நன்றி உணர்வோடு நினைவுகூரப்படுகிறது.

தவிர, தாங்கள் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 220 பரப்புக் காணியை ஈந்தளித்தீர்கள்.

அதேநேரம் நான் 220 பரப்புக் காணியை யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கினேன் என்று எந்தவொரு கூட்டத்திலும் தாங்கள் பேசியதில்லை. அதை வைத்து பிரசாரம் செய்ததுமில்லை. அஃது உங்களினதும் உங்கள் தந்தையினதும் பெருந்தன்மை என்றே உணர்கிறோம்.

இப்போது இந்த அவசர மடல் எழுதுவதற்குக் காரணம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தங்களுக்கும் மிக நெருக்கமான அரசியல் உறவு இருப்பதை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தின்போது கண்டு கொண்டோம்.

எனவே ஜனாதிபதியுடனான உங்களின் நட்பு எம் மக்களின் துன்பத்துக்கு ஒத்தடம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதாலேயே இக்கடிதம் தங்களுக்கு எழுதப்படுகிறது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் அவர்களே! எமது உரிமை என்பதற்கு அப்பால், எமது மக்கள் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வின்றி மிகுந்த வேதனையோடு வாழ்கின்றனர்.

அதிலும் தமிழ் மக்களின் காணிகளைப் படையினர் கபளீகரம் செய்துள்ளனர். இதனால் குறித்த காணி உரிமையாளர்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

தவிர, வன்னிப் பெருநிலப்பரப்பில் சட்ட விரோதமாக சிங்கள மக்களைக் குடியமர்த்துகின்ற காரியம் மிக வேகமாக நடந்தாகின்றது.

இதனால் எமது மக்கள் காலாகாலமாக விவசாயம் செய்த நில புலங்கள் சிங்களக் குடியேற்றக்காரர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

எனவே இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும். இதை நாம் இப்போது செய்யத் தவறுவோமாயின், அதன் விளைவு எதிர்காலத்தில் மிக மோசமாக அமையும்.

ஆகையால் இவைபற்றி நீங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

உங்களுக்கும் ஜனாதிபதி ரணிலுக்குமான நட்பின் மூலம் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படுமாயின், அதனால் எமது மக்கள் மிகுந்த நன்மையடைவர்.

ஆகவே உங்களை அவர் பயன்படுத்திக் கொள்வதென்பதைவிட, நீங்கள் எம் மக்களுக்காக அவரைப் பயன்படுத்த வேண்டும்.

அதனை விரைவாகச் செய்து, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக எத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமோ அதனைச் செய்வதற்கு நீங்கள் கடும்பிரயத்தனம் எடுக்க வேண்டும்.

# ஜனாதிபதி வழங்கிய காணி உறுதிகள் எம் மண்ணில் எமக்கான அடையாளம்

## அதனை கவனமாக பயன்படுத்தவும் – சுமந்திரன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்ட காணி உறுதிகளினை மக்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். அது எமது பரம்பரையின் அடையாளம் வெளியாட்களுக்கு விற்றல், ஈடுவைத்தல் போன்ற செயற்பாடுகளினை மேற்கொள்ள வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி மக்களுக்கு காணி உரிமையை வழங்கியுள்ளார், இதில் சிலருக்கு விளக்கம் குறைவாக இருக்கிறது. இதில் வழங்கப்பட்ட அநேகமான காணிகள் எம் மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த காணிகள்.

இப்பொழுது அவர்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது.

சிலருக்கு இந்த காணி உரிமைகள் வழங்கப்பட்டாலும் சில கட்டுப்பாடுகளுடன் காணி உரிமைகள் வழங்கப்பட்டது. இப்பொழுது அந்த கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கி அவர்களுக்கு முழுமையான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த காணி உரிமைகளை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என அவர்களுக்கு அறிவுரை கூறுவது எங்களுடைய கடமை.

வெளியாட்களுக்கு இதனை விற்க வேண்டாம், ஈடு வைத்து இழந்துவிட வேண்டாம், வெளிநாட்டு நிறுவனங்கள் இதனை கொள்வனவு செய்வதை அனுமதிக்க வேண்டாம் என தெரிவித்தார். (ம-7,10)

# இலங்கை சிறையில் உள்ள பாகிஸ்தானியரை சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை

பாகிஸ்தானும் இலங்கையும் தமது நாட்டில் உள்ள கைதிகளை பரஸ்பரம் அவர்களது தாயகத்திற்குத் திருப்பி அனுப்புவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க ஒப்புக் கொண்டுள்ளன.

இலங்கை சிறைகளில் உள்ள 43 பாகிஸ்தானிய பிரஜைகளை அவர்களது நாட்டுக்கு அழைத்து செல்லும் நடவடிக்கை குறித்து இலங்கை உயர்ஸ்தானிகர் அட்மிரல் (ஓய்வு) ரவீந்திர விஜேகுணரத்ன மற்றும் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி ஆகியோருக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் பரஸ்பர நலன் மற்றும் இருதரப்பு உறவுகளின் மேம்பாடு குறித்து விவாதிக்கப்பட்டதுடன், பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

பாகிஸ்தான் கைதிகள் 43 பேரை நாடு திரும்ப அழைத்து செல்வதற்காக இலங்கை அதிகாரிகளுடன் பாகிஸ்தான் உள்துறை அமைச்சு கடந்த ஒரு மாதமாக செயல்பட்டு வருகிறது. இது தொடர்பில் இலங்கை உயர்ஸ்தானிகர் சகலவிதமான ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார். (ம-7,10)

# தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவு

## ஏற்க மறுக்கும் தோட்ட உரிமையாளர்கள்

(கண்டி)

அரசாங்கம் பரிந்துரைத்தவாறு தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது.

தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுடன் கலந்தாலோசிக்காமல் குறித்த சம்பள அதிகரிப்பை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே ரொஷான் ராஜதுரை அந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். தொழில்துறையில் உள்ள அனைத்து தரப்பினரினதும் நலன்கள் மீது எந்த அக்கறையும் இல்லாமல் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

எந்தப்பலனையும்தராத இந்தத் தீர்மானத்தின் ஊடாக இந்நாட்டின்தேயிலை மற்றும் இறப்பர் தொழிலின் ஒவ்வொரு அம்சத்தையும் மேலும் பலவீனப்படுத்தும் என்பது எமது நம்பிக்கை.

சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பிராந்திய தோட்டக் கம்பனிகள் போன்ற நியாயமற்ற சம்பள உயர்வை ஏற்றுக்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கும் முயற்சிகள் தொழில்துறையின் அடிப்படை இயக்கத் தேவைகளைக் குறைப்பதன் மூலம் சாதிக்க முடியாது.

முழுப் பெருந்தோட்ட எதிர்காலமும் ஆபத்தில் உள்ள நிலையில், இலங்கை முழுவதும் உள்ள தொழிலாளர்கள் மற்றும் சமூகங்களின் வாழ்வாதாரமும் ஆபத்தில் உள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (ம-7,10)

# புதையல் தோண்டிய இருவர் கைது

மாத்தளை, மக்குலு கஸ்வெவ பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் கலேவெல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலேவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[illegible] வெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38 மற்றும் 70 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# மின்சாரம் தாக்கியதில் பெண்ணொருவர் பலி

ஹொரணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அபகஹவத்த பகுதியில் மின்சாரம் தாக்கியதில் 78 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மின்கம்பத்திலிருந்த மின்சாரக் கம்பிகள் தரையில் வீழ்ந்து கிடந்த நிலையில் குறித்த பெண் அந்த மின்சாரக் கம்பிகளில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ஹொரணை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம் என்று முன்னர் கூறியிருந்தேன். 1796 முதல் 1832 வரையுள்ள பகுதி முதற் பகுதியாகும். இக் காலத்தில் ஆங்கிலேயர், தமது ஆட்சியை உறுதியாகத் தாபிக்கவும் பரிபாலனத்தை வலுப்படுத்தவும் முயன்றனர். இது பற்றி பகுதி IV இல் ஆராயப்பட்டது.

இப் பகுதியில் விவசாயப் பொருளாதாரத்திலிருந்து வர்த்தகப் பொருளாதாரத்துக்கு மாறியது எப்படி என்பது ஆராயப்படுகிறது. 1832 தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையுள்ள காலத்தினை, இலங்கையின் விருத்திக் காலமெனக் கூறுவர். இவ்வாண்டுகளில் இலங்கை பல வழிகளிலும் துரிதமாக முன்னேறியது. விசேடமாக, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பரந்து, நாட்டின் பொருளாதாரத்தைப் புரட்சிகரமாக மாற்றியது. பொருளாதார மாற்றங்கள் சமூக, நிருவாக மாற்றங்களுக்கு வழிகாட்டின.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் நிகழ்ந்த மாற்றத்திற்குச் சரி நிகரான மாறுதல். இலங்கையில் 1832 இல் கோல்புறூக் சீர்திருத்தங்களுடன் தான் ஏற்பட்டது. அவ்வாண்டில் இராசகாரிய முறையினதும், அதன் அடிப்படையில் உருவாகியிருந்த அரசாங்க ஏகபோக உரிமைகளினதும் ஒழிப்புத்தான், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, கட்டிலா வியாபாரம், தனியார் முயற்சி, முதலாளித்துவ முறையின் வளர்ச்சி என்பனவற்றிற்கு வழியைத் திறந்துவிட்டது.

1815 இல் இலங்கை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வரப்பட்ட போதிலும் தாழ்பிரதேசச் சிங்கள, கண்டி, மற்றும் தமிழ் மாநிலங்களில் மூவித நிர்வாக முறைகள் இயங்கி வந்தன. 1833 இல் தான் இலங்கையைச் சட்டத்தின் மேலாண்மையில் கீழ் ஒரு நாட்டின் அரசாக அமைக்கவல்ல ஒற்றையாட்சி நிருவாக முறையும், நீதி பரிபாலன முறையும் அமைக்கப்பட்டன. ஆங்கில மொழி புகுத்தப்பட்டமை, ஐரோப்பாவில் கிரேக்க இலக்கியங்கள் பயிலப்பட்டதனால் ஏற்பட்ட மாற்றத்துக்கு நிகரான ஒரு மாற்றம், நடு வகுப்பினரின் சிந்தனைத்துறையில் ஏற்பட வழி பிறந்தது.

1833 இல் ஒற்றை ஆட்சி கொண்டு வரப்பட்டதோடு, யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் இழந்த இறையாமையை மீளப்பெறும் உரிமையை தமிழருக்கு இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது.

கோட்டை அரசு, 1598 மல்வானை உடன்படிக்கை மூலம் தனது இறைமையை போர்த்துக்கேயரிடம் இழந்தது போலவும், கண்டி அரசு 1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கை மூலம் இறைமையை பிரித்தானியரிடம் இழந்தது போலவுமே, 1616 இல் யாழ்ப்பாண அரசு தனது இறைமையைப் (நல்லூர் உடன்படிக்கை) போர்த்துக்கேயரிடம் இழந்திருந்தது. இதுபற்றி, 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் நாளன்று டெய்லி மிரர் பத்திரிகையில் மல்வான மற்றும் மற்றைய ஒப்பந்தங்கள் பற்றி அந்தோனி ஹென்ஸ்மன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அதில் "நல்லூர் உடன்படிக்கையின்" போது, அப்போது போர்த்துக்கலின் அரசராக இருந்த ஸ்பானிய அரசர் ஒரு பக்கமாகவும், மறுபக்கம் யாழ்ப்பாண அரசைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரமுகர்களும் இருந்திருந்தார்கள் என்பது இங்கு அவதானிக்கப்படவேண்டியது.

யாழ்ப்பாண அரசானது, சுதந்திரத்துடன் இருந்த, சட்டபூர்வமான, அரசியற் செயலாட்சியில் வேற்று நாட்டால் அங்கீகரிக்கப்பட்ட இறைமையுள்ள ஓர் அரசாக இருந்திருந்தது என்பது இவ் உடன்படிக்கையால் தெரியவருகிறது. யாழ்ப்பாண அரசுடனான இவ் உடன்படிக்கையில் "சிலோன்" என்ற பதமோ, "லங்கா" என்ற பதமோ அல்லது வேறெந்தப் பதங்களோ இந்த அரசை விவரிப்பதற்கு இருந்திருக்கவில்லை" என்கிறார் ஹென்ஸ்மன்.

கோட்டை அரசையும் யாழ்ப்பாண அரசையும் போர்த்துக்கேயர் தனித்தனியாகவே ஆண்டார்கள். 1618 இற்கும் 1658 இற்கும் இடையில் இந்த ஆள்புலங்களுக்கான வரவுசெலவுத் திட்டம், வரவுசெலவு அறிக்கைகள் போன்றவை தனித்தனியான அறிக்கைகளாகவே லிஸ்பனின் திறைசேரிக்கு அனுப்பப்பட்டு வந்தன, என்று எழுதுகிறார் அந்தோனி ஹென்ஸ்மன்.

1658 இல் ஆள்புலங்கள் போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட்டபோது, இந்த இரண்டு ஆள்புலங்களும் தனித்தனியாக விவரிக்கப்பட்டு இரண்டு தனிவேறான ஆவணங்களின் மூலமே கைமாறியிருந்தன.

1803 ஆம் ஆண்டு ஏமியன்ஸ் உடன்படிக்கையின் படி ஒல்லாந்தரிடமிருந்து சட்டபூர்வமாக இந்த ஆள்புலங்களை பிரித்தானியர் பெற்றபோதும் அவை தனித்தனியாக விவரிக்கப்பட்டு தனிவேறான ஆவணங்களின் ஊடாகத்தான் கைமாறியிருந்தன. இந்தக் கையளிப்புகளில் ஆள்புலங்களைக் குறிப்பிடுவதற்கு "சிலோன்", "லங்கா" போன்ற சொற்களோ அல்லது வேறு பொதுவான சொற்களோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான சொற்கள் வெறும் புவியியல் அடிப்படையிலேயே உபயோகிக்கப்பட்டிருந்தன - இவை ஹென்ஸ்மன் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் ஆகும்.

வரலாற்றின் திருப்புமுனை 1832 ஆக இருந்தது என்கிறார் ஹென்ஸ்மன். இந்த ஆண்டிலேயே தமது காலனித்துவ நலன்களுக்காக பிரித்தானியர் இலங்கைத் தீவிற்கான ஒரு சட்டநிரூபண சபையை அறிமுகப்படுத்தி, கொழும்பைத் தலைநகராக்கி, "ஒற்றையாட்சி" அரசையும் நிர்வாகத்தையும் உருவாக்கினார்கள். இந்தக் கட்டமைப்பு அவர்களுடைய வழிவந்த "பழுப்புநிறத் துரைகளிடம்" 1947 இல் கையளிக்கப்பட்டது.

தாம் உருவாக்கிய கட்டமை ப்பு நீடிக்கவேண்டும் என்பதும் அதற்கூடாக இந்தத் தீவில் தமது பாரிய மூலதன முதலீடு பாதுகாக்கப்படவேண்டும் என்பதும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்களாக இருந்தன என்று கூறி, சிக்கலின் அடி ஆழத்தைத் தொட்டுக்காட்டுகிறார் ஹென்ஸ்மன்.

மல்வானை, நல்லூர், கண்டி உடன்படிக்கைகளின் மூல ஆவணங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில் இருந்துதான் நேர்மையான அறிஞர்களின் வரலாற்று, அரசியல் ஆய்வுகள் ஆரம்பமாக வேண்டும். இவற்றின் பிரதிகள் கொழும்பு ஆவணசாலையில் இல்லாவிட்டால் லிஸ்பனிலும், ஹேக்கிலும், இலண்டனிலும் உள்ள ஆவணசாலைகளிலாவது இருக்கக் கூடும் என்கிறார் ஹென்ஸ்மன்.

பல தசாப்தங்களாகவே கொழும்பு ஆவணக்காப்பகத்தில் தமிழ் அதிகாரிகள் எவரும் இல்லை. கோவாவில் இருக்கும் போர்த்துக்கேய ஆவணக்காப்பகத்தில் யாழ்ப்பாணப் பிரதானிகளுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான உடன்படிக்கை ஆவணம் ஒன்று இருப்பதாக ஆவணக்காப்பகத்தின் முன்னாள் இயக்குநர் கலாநிதி ஷிரோட்கர் சொல்லக் கேட்டிருக்கிறார் ஒரு தமிழ்க் கல்வியாளர்.

ஐரோப்பிய தலைநகரங்களின் ஆவணக்காப்பகங்களில் ஆய்வு செய்வதற்கு வழிவகையுள்ள தமிழ் அறிஞர்கள் இத்தகைய ஆவணங்களின் மூலங்களைப் பிரசுரித்து வெளிக்கொண்டுவருவதற்கு முன்வரவேண்டும். இவ்வாறு தன் கட்டுரையைத் தொடர்கிறார் ஹென்ஸ்மன்.

### கோல்புறுக் விசாரணை

மெயிற்லண்ட் தேசாதிபதி அநேக சீர்திருத்தங்களைச் செய்தார் என முன்னர் பார்தோம். இச்சீர்திருத்தங்கள் ஏற்பட்டும் இக்காட்டின் வருவாய் அதன் செலவுக்குப் போதுமானதாக விருக்கவில்லை. எனவே ஏதோ பிழைகள் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தீவின் நிதி நிருவாக முறையினைப் பரிசீலனை செய்து பரிபாலனச் செலவுக்குப் போதுமானதாக நிதி நிலைமையினைக் கொண்டு வர வேண்டுமென்று நிச்சயித்தது. இன்னும் இங்கிருந்த சட்ட நிருவாகமும் தக்கதாக இருக்காமையினால் அதனையும் சீர்திருத்தியமைக்க வேண்டுமென எண்ணியது.

எனவே இலங்கையின் பரிபாலன முறையினை ஆராய்ந்து அறிக்கை விடுமாறு சேர் வில்லியம் கோல்புறூக் என்பவரை 1829 ஆம் ஆண்டிலும், மீதி நிர்வாக விடயங்களை ஆராய்ந்து அறிக்கை விடுமாறு ஸி. எச். கமரூன் என்பவரை 1880 ஆம் ஆண்டிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பியது.

இவ்விருவரும் இங்கிலாந்து அரசியலில் லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்கள். தனி மனிதனுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும்: எல்லா விஷயங்களிலும் அரசாங்கம் தலையிடக்கூடாது என்ற கொள்கை உடையவர்கள்.

இத்தகைய நோக்குடையார்க்கு இலங்கையில் இருந்த இராஜகாரிய முறை வெறுப்பைக் கொடுத்தது. இம் முறையினால் பலர் ஒரு சிலர்க்குத் தொன்று தொட்டுக் கட்டுப்பட்டவர்களாய், அடிமைகளாய் தமக்கு வேண்டிய பிழைப்பைத் தாமே தேடுவதற்குச் சுதந்திரம் அற்றோராய் இருப்பதாக உணர்ந்தனர்.

இன்னும், முதலியார்மார் விதானமார் என்னும் அதிகாரிகள், உழுத்துப்போன ஓர் மானிய முறைக்கே ஏற்றவர்களன்றி இக் கால முறைக்கு ஏற்றவர்கள் அல்லர் என இவ்விருவரும் கண்டனர். இலங்கையை முடிக்குரிய குடியேற்ற நாட்டு முறையில் ஒரு தேசாதிபதியின் சர்வாதிகாரத்தில் விடுவது நல்லதல்ல என, அரசியலில் தாராள நோக்குப் பூண்ட இவர்கள் எண்ணினர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச...

ணித்த ஒருவரே இவ்வாறு காயமடைந் துள்ளார்.

தொலைபேசியில் யாரோ ஒருவரு டன் குறித்த நபர் சத்தமாக பேசிக் கொண்டிருந்தார் எனவும் இதன்போது விழுந்திருக்கலாம்என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் கொடிகாமம் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (ம-7,10)

## மோ.சைக்கிள்...

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணியள வில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் சாவகச்சேரி மட்டுவில் பகுதியை சேர்ந்த பி.கனுஜன் (வயது - 22) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் இன்று கனடா வுக்கு பயணமாக இருந்த நிலையில் இந்த துயரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் சாவகச்சேரி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேல திக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7,10,30,33)

## பொலிஸ்...

ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ம-7,10,316)

## மகிந்த அமைத்த...

இதற்கு எதிராக அரசாங்கத்திற் குள்ளேயே பல்வேறு சக்திகள் செயற் பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப் பினர் குறிப்பிட்டார்.

"அரசாங்கத்துக்குள் இருந்துதான் சதி உருவானது. சர்வதேச சக்தி களும், பயங்கரவாத அமைப்புகளும் அரசாங்கத்தை கவிழ்க்க செயற் பட் டன. அதன் பலனாக நல்லாட்சி அர சாங்கம் உருவானது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ ஒப்படைத்த அரசாங்கத்தை கோட்டாபாய ராஜபக்ஷ பொறுப்பேற் றார்" என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தொகுதி மாநாடு முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தலாவ நகரில் நடை பெற்றது.

"ரஜரட்டயில் இருந்து போரை ஆரம் பிப்போம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த தொகுதி மாநாட்டில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திர ளான மக்கள் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றும்போதே நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த மாநாடு முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமை யில் இடம்பெற்ற போதும் அவர் மாநாட் டில் உரையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## தமிழர்...

கையின்படி, 1956ஆம் ஆண்டு தொடக் கம் 2009ஆம் ஆண்டு வரைக்கும் 253 818 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வும் இதில் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரைக்குமான இடைப்பட்ட காலத்தில் 169 796 பொது மக்கள் கொல்லப்பட்டதாக அறிக்கை யிட்டுள்ளது.

**பலாத்காரம் - சித்திரவதை**

இதனிடையே இந்தக் காலப்பகுதி யில் பலாத்காரம் செய்யப்பட்ட பெண் களின் எண்ணிக்கை 12 437 எனவும் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டவர்கள் 112 246 எனவும் இடம்பெயர்ந்தவர்கள் 2 390 809 என வும் முதல்முறையாக விக்கிபீடியா அறிக்கையிட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இன அழிப்பு இடம்பெற்றுள்ளது என்பதை இன்றளவிலும் ஏற்க மறுக்கும் தரப்பு கள் சர்வதேச மட்டத்தில் காணப்படு கின்றன. (ம-7,10)

## இந்தியா...

கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் லோக் சபா (பாராளுமன்றம்) தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், தற்போதைய பிரதமர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஒருமுறை தேர்தலில் வெற்றி பெறும் என செய்திகள் வெளி யாகி வருகின்றன.

அதன்படி, இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ் வில் கலந்து கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள வுள்ளார்.

மேலும், [illegible]

அதிகாரிகளை சந்தித்து ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து ஊடக நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஜேவிபியின் அரசி யல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸா நாயக்க எதிர்வரும் இரு வாரங்களுக் குள் இரு வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி, முதலில் அநுர குமார திஸாநாயக்க இங்கிலாந்துக்கு பய ணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள தாகவும் அதன் பின்னர் ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னர் அவர் இந்தியா, சுவீடன் மற்றும் கனடா போன்ற நாடு களுக்கு பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுர குமார திஸாநாயக்கவும் போட்டியிட்டு வெளிநாட்டு பய ணங்களில் ஈடு பட்டு வரும்நிலை யில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி தேர் தல் நிறைவடை யும் வரையில் கிராமங்களுக்கு செல்லத் திட்ட மிட்டு வருவதாக தெரிய வந்துள் ளது. (ம-7,10)

## தமிழ...

தில் ஜனாதிபதி தேர்தல் தொடர் பில் பேசப்பட்டது.

ஆனால் யாரை ஆதரிப் பது என முடி வெடுக்கவில்லை.

தற்போது ஜனாதிபதித் தேர் தலில் மூன்று பேர் பிரதானமாக போட்டியிடுவதாக அறிகிறோம். அவர்கள் மூவரின் தேர்தல் அறிக்கைகள் வெளியான பின் னர், அது தொடர் பில் ஆராய்ந்து யாருக்கு ஆதரவு வழங்குவது என முடிவெடுப்போம்.

அதேவேளை கடந்த மே தின கூட்டம் ஒன்றில் சஜித் பிரேமதாஸ உரையாற்றும் போது 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்து வேன் என கூறி யிருந்தார்.

இது தொடர் பில் நான் அவரை பாராளு மன்றில் சந்தித்த போது கேட் டேன். பொலிஸ், காணி அதிகாரம் அதற்குள் இருக் கும் என அவர்

அதற்கு இருக்கும் எனக் கூறினார்.

அவ்வேளை நான் அவரிடம் கூறி னேன், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது , 13ஐ விட அதிகமாக தரலாம் என கூறினீர்கள் என அவரிடம் கூறி னேன் எனத் தெரிவித்தார். (ம-7,10,33)

## கொழும்பில்...

விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

தமிழர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கார்த்திகைப் பூவை அவர் களின் மனங்களை புண்படுத்தும் வகை யில் காலணியில் பயன்படுத்தியமை வடிவமைப்பில் வேண்டுமென்றே உள் வாங்கப்பட்டதா? என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனத்திற்கு இந்த விடயங்களை எடுத்துச் சென்று உற் பத்தியில் இந்தச் சின்னத்தை தவிர்க்க வும், ஏற்கெனவே காட்சி அறையில் உள்ள குறித்த காலணிகளை மீளப் பெறவும் நடவடிக்கை எடுக்க தமிழர் கள் சார்பில் அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை கள் விடுக்கப்பட்டு வருகின்றன.(ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 5486
E 4 5 4 6 5 5
அத சம்பத E 4 6 5 5
சீட்டிழுப்பு இலக்கம் 61

தன நிதானய
திகதி - 2024.05.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1516
V 12 28 33 40 V
67948

மெகா பவர்
திகதி 27/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1834
Q 09 24 55 64 77
90703

லக்கி 7 VIP
திகதி 2024.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 312
F 9 0 6 4 2 7 F

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3728
சீட்டிழுப்பு திகதி 27.05.2024
W 07 18 21 32
W 93101

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 0795
சிம்மம் 11 16 39 48 சிம்மம்
84493 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.05.2024 வெற்றி வாரம் 194 வர்ணம் ஊதா
R 8 1 9 5 7 3
30453 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,886,244.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2460 வர்ணம் ஊதா சீட்டிழுப்பு திகதி 27.05.2024 தினம் திங்கள்
03 24 38 71 F
44168
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,226,379.20

சனிதா
திகதி 2024.05.27 வெற்றி வாரம் 4621
06 27 31 32 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,856,302.00
22713

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4172 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.27 தினம் திங்கட்கிழமை
17 19 37 49 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,637,837.60
569214

கப்ருக
E 30 21 42 54 75
1636 பச்சை 27.05.2024 திங்கள்
293414
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 524,484,653.40

ஜயோதா Jayoda
திகதி 2024.05.27 வெற்றி வாரம் 2028 வர்ணம் செம்மஞ்சள்
04 37 50 57 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,602,899.20
88362

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2286
சீட்டிழுப்பு திகதி : 2024.05.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 115,673,435.20
14 32 44 46 B
681740


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்...

போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 மே 18 இல் யுத்தம் நிறைவடைந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், வடக்கின் நிலைமை குறித்து எம்மால் மகிழ்ச்சியடைய முடியாது. யுத்தமொன்று முடிவடைந்த பின்னர் சமாதானத்தின் பலனைக் கூட சரிவர இச்சமூகம் பெறவில்லை. சமாதானத்தின் பலன்கள் சரியாக கிடைத்திருந்தால் இங்குள்ள பாடசாலைகள் கூட தேசிய பாடசாலைகளாக மாறியிருக்க வேண்டும்.

பெயர் பலகையுடன் சுருங்கிய தேசியப் பாடசாலைகளை இங்கு நாம் நாடவில்லை. ஆனால் இங்கு அவ்வாறான எதுவும் நடக்கவில்லை. இன்னும் கூட இப்பிரதேசங்களில் யுத்தத்தால் அழிந்து போன பாடசாலைகள் இருக்கின்றன. சமாதானம் ஏற்பட்டு 15 வருடங்களாகின்றன. யுத்தத்தை வெற்றி கொண்டதற்காக எத்தனை தடவை வாக்களித்தீர்கள். இன்னும் எமக்கு யுத்தத்தை காரணம் காட்ட முடியாது. இப்பிரதேச பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் நீதி நியாயம் நிலைநாட்டப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத வரலாற்றில், அரசியலால் நம்பிக்கையிழந்து போயுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூய நம்பிக்கையை என்னால் மாத்திரமே வழங்க முடியும். வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் தாம் மாத்திரமே எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்களுக்காக சேவைகளை முன்னெடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கிவைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் டிஜிட்டல் புரட்சி வெறும் வார்த்தையில் மட்டுமே.

டிஜிட்டல் புரட்சியால் நம் நாடு வலுப் பெறும் என்று தலைவர்கள் சொன்னாலும், தகவல் தொழில்நுட்பக் கல்வி முறைசாரா போக்கிலேயே இருந்து வருகிறது. இவ்வாறு நடந்து கொண்டு தகவல் தொழில்நுட்பக் கல்விப் போக்கை சரியான முறையில் முன்னெடுக்க முடியாது.

பாடசாலைகளில் இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற வேண்டும். இந்த மாற்றம் பாடசாலைகளில் இருந்து ஏற்பட வேண்டும். இளம் சந்ததியினர், இந்நாட்டின் அடுத்த மனிதவளம், பாடசாலைகளிலேயே இருக்கின்றனர். பிரயோக ரீதியாக இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதை விடுத்து, வாயளவில் பேசிவருவதில் இந்த டிஜிடல் புரட்சி ஒருபோதும் ஏற்படாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் நிறுவப்படும். இதன் ஊடாக பெண்கள் கூட தகவல் தொழிநுட்பத்தில் வலுவூட்டப்படுவார்கள். இதற்கான ஏற்பாடுகளை எமது ஆட்சியில் நாம் முன்னெடுப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7.10)

## ஆபத்தான...

படுத்தும் சட்டமூலம் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

தற்போது ஆணை இல்லாத பாராளுமன்றம் இருப்பதால், இவ்வாறான சட்டத்தை நிறைவேற்றுவது மிகவும் ஆபத்தானது என பேராசிரியர் தெரிவித்துள்ளார். பீரிஸ் மேலும் கூறுகையில்,

இலாபம் ஈட்டும் நிறுவனங்களை விற்பனை செய்வதற்கான திட்டங்களை அரசாங்கம் துரிதமாக தயாரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண புதிய பாராளுமன்றத்தின் தேவை இன்றைய சமூகத்தில் பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் தேர்தலை கண்டு பயந்து பணமில்லை என கூறி தேர்தலை ஒத்திவைக்க முயல்வதாக பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

முதலில் பாராளுமன்றத் தேர்தலா அல்லது ஜனாதிபதி தேர்தலா என்பது தொடர்பில் மக்கள் ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்த எம்.பி, அரசியலமைப் பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ம-7.10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0473) 076 825 7716 (ஆகாஸ்)


JV LANGUAGE CENTER
வெளிநாடு செல்பவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்
Deutsch - Germany, Swiss
IELTS - UK and Canada
French - France
செல்வோர்க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
சிவன் கோவிலுக்கு முன்பாக Station Road சுன்னாகம்.
077 729 1307, 077 374 3404

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0472)

கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு
தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து
(C-0472)
V2 GUEST 0743900360 0743900361

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# மரண அறிவித்தல்



## சற்குணநாதன் இராஜேஸ்வரி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணநாதன் இராஜேஸ்வரி அவர்கள் 26.05.2024 அன்று (ஞாயிற்றுக்கிழமை) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - சுகிர்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருநாயகம் - சங்குவதி தம்பதிகளின் மருமகளும் சற்குணநாதன் அவர்களின் அன்புத் துணைவியாரும் மோகனதாசன் அவர்களின் அன்புத் தாயாரும் கமலாம்பிகை, கதிர்மலர், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சண்முகராசா, பரமேஸ்வரி, கோகிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் சகுந்தலவனிதேவி, மகேந்திரராசா (கனடா), லலிதாதேவி காலஞ்சென்ற சட்டநாதபிள்ளை மற்றும் தாமரைச்செல்வி (சுவிஸ்), காலஞ்சென்ற லிங்கப்பிள்ளை, சிவசம்பு மற்றும் யோகமலர், சிவமலர், சிவராசா, குணசேகரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.05.2024) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மோகனதாசன் (மோகன் - மகன்)
077 844 9354
(C-0471)


அருள்மனை
முதியோர் பராமரிப்பு நிலையம்
புதுப்பொலிவுடன்
31.05.2024 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது
அனுமதிக்கு விரையுங்கள்
முதல் 10 அனுமதிகளுக்கு விசேட விலைக்கழிவு
சேவைகள்
› வைத்திய ஆலோசனைகள்
› இயன்மருத்துவ சேவைகள்
› 50m தொலைவில் மருத்துவமனை
› Ambulance வசதி
› அமைதியான சூழல்
› கனிவான கவனிப்பு
24 hours SERVICE EVERYDAY
(C-0472)
CALL US 076-6604306
Memorial School Lane, Manipay


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org